விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 24 புதன்கிழமை (09.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 233

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## சென்.ஜோண்ஸ் கல்லூரி மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர்

### ம.உ.ஆ.குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

சென்.ஜோண்ஸ் கல்லூரி மாணவர்கள் சிலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

கல்லூரிக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவக் காவலரணை அகற்ற வேண்டுமென நேற்று முன்தினம் முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் நேற்று பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.மாணவர்களின் சில சைக்கிள்கள் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டதாகவும் மூன்று சைக்கிள்கள் மற்றும் ஆவணங்கள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-133)

## இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 26 வயது இளைஞர் ஒருவர், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணிக்கு கோண்டாவில் நாகபூஷணி அம்மன் வீதி சிவபூமி அறநெறிப் பாடசாலைக்கு அண்மையில் நடைபெற்றது.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் ஊரெழு கிழக்கைச்சேர்ந்த சதாசிவம் கஜரூபன் என்ற நகைத்தொழிலாளியாவார். இச் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு கட்டளையிட்டார்.

இதேவேளை கொழும்புத்துறையில் வைத்து இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று மாலை நல்லூர் மஞ்சத்திருவிழாவிற்குச் சென்று விட்டு திரும்பிக்கொண்டிருக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# மூடப்பட்டிருந்த மாவிலாறு அணை

# புலிகளால் நேற்று திறக்கப்பட்டது

## மனிதாபிமான அடிப்படையில் திறந்ததாகத் தெரிவிப்பு

(திருகோணமலை)

**இரண்டு வாரங்களாக மூடப்பட்டிருந்த மாவிலாறு அணை நேற்று மாலை திறந்து விடப்பட்டது. மனிதாபிமான அடிப்படையில் அணை திறந்து விடப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.**

மக்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையில்லை. எனினும் மனிதாபிமான முறையிலும் நோர்வே தரப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்கியும் அணையைத் திறந்ததாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக மாவிலாற்றுப் பகுதி மக்கள் அரசாங்கத்தினால் புறந்தள்ளப்பட்டு வந்தனர். அதற்காக சில கோரிக்கைகளை முன்வைத்து மாவிலாற்று அணையை மூடினர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் அலுவலகம் இன்று கொழும்பில் திறப்பு

(கொழும்பு)

கருணா குழுவின் அரசியல் அலுவலகம் ஒன்று இன்று கொழும்பில் திறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இன்று கொள்ளுப்பிட்டியில் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் திறக்கப்படவுள்ள இவ் அலுவலகத் திறப்பு விழாவிற்கு முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

மக்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையில்லை. எனினும் மனிதாபிமான முறையிலும் நோர்வே தரப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்கியும் அணையைத் திறந்ததாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக மாவிலாற்றுப் பகுதி மக்கள் அரசாங்கத்தினால் புறந்தள்ளப்பட்டு வந்தனர். அதற்காக சில கோரிக்கைகளை முன்வைத்து மாவிலாற்று அணையை மூடினர். (10 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

கருணா குழுவின் அரசியல் அலுவலகம் ஒன்று இன்று கொழும்பில் திறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இன்று கொள்ளுப்பிட்டியில் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் திறக்கப்படவுள்ள இவ் அலுவலகத் திறப்பு விழாவிற்கு முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஏ)

# முன்னாள் பா.உ.சிவதாசனின் வாகனம் குண்டுத் தாக்குதலில் சிக்கியது!

## நால்வர் பலி; 9 பேர் படுகாயம்

(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ச.சிவதாசன் சென்ற வாகனம் மீது நேற்று குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டிப் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டதுடன் ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சங்கரப்பிள்ளை சிவதாசன் உட்பட ஏழு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பம்பலப்பிட்டி டிக்மன் வீதியில் உள்ள அம்ரித் உணவகத்திற்கு முன்பாக பிற்பகல் 2.45 மணியளவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சிவதாசன் வானில் சென்றுகொண்டிருந்த போது இக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்திலேயே நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சிவதாசன் உட்பட ஒன்பது பேர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் சிவதாசனின் மெய்ப்பாதுகாவலர் எனத் தெரிவிக்கப்பட்டது. சிவதாசனும் அவரின் மற்றொரு மெய்பாதுகாவலரும் தீவிரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் முன்னாள் (10 ஆம் பக்கம் பார்க்க)



உள்ளே

தரம் – 5 புலமைப்பரிசில் பயிற்சி மலர்த்தாள்

## அம்பாறையில் கிளைமோர் இரு அதிரடிப்படையினர் பலி

(மட்டக்களப்பு)

அம்பாறை பொத்துவிலில் நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

படையினருக்கு தண்ணீர் எடுத்துச்சென்ற அதிரடிப்படையினர் மீது அம்பாறை பாணமமையில் உகந்த– பனகல பகுதியில் நேற்று முற்பகல் 11.20 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படையினர் மீது திருமலையில் தாக்குதல்

திருகோணமலையில் விமானப்படையினர் மீது அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் பலியாகியுள்ளார்.

திருகோணமலை மொரவெவ பகுதியில் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விமானப்படையினர் மீது நேற்றுக் காலை 7.15 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவ இடத்திலேயே விமானப்படையைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டார். பொதுமகன் உட்பட மூவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு ஆண்டுகளின் பின் குரோனியின் மரண விசாரணை

நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் ஹன்சி குரோனியின் மரணம் தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

தென்ஆபிரிக்காவின் வெற்றிகரமான அணித்தலைவராக இருந்த குரோனி சூதாட்ட சர்ச்சையில் சிக்கிக்கொண்டதை அடுத்து 2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அவருக்குதென் ஆபிரிக்க கிரிக்கெட் சபை வாழ்நாள் தடை விதித்தது. கடந்த 2002ஆம் ஆண்டு ஜுன் மாதம் 1ஆம்திகதி அவர் விமான விபத்தில் சிக்கி பலியானார். இது தொடர்பாக சமீபத்தில் அதிகாரபூர்வ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதையடுத்து நீதிபதி சிராஜ் தேசயா தலைமையில் நேற்று விசாரணை துவங்கியது. மேலும் இவ்வழக்கை வீடியோ ஒளிப்பதிவு செய்ய தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பாக நேற்று முன்தினம் நீதி மன்றத்தில் சிவில் ஏவியேஷன் ஒத்தோரொட்யின் மூத்த அதிகாரி ஆன்ட்ரேடிகுக் வாக்குமூலம் அளித்தார்.

## மினி உலகக் கோப்பை ஆஸி. உத்தேச அணி அறிவிப்பு

மினி உலகக் கோப்பைக்கான (சம்பியன்ஸ்றொபி) 30பேர்கொண்ட உத்தேச அணியை அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. தொடரில் கலந்துகொள்ளும் 14 பேர் கொண்ட இறுதி அணி எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

இந்தியா அவுஸ்திரேலியா இலங்கை உள்ளிட்ட 10 நாடுகள் பங்கேற்கும் மினிஉலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில் எதிர்வரும் ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. இத் தொடரில் பங்கேற்கும் நாடுகள், 30பேர் கொண்ட உத்தேச அணியை இன்று அறிவிக்குமாறு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவித்திருந்தது. இந்நிலையில் அவுஸ்திரேலிய அணித் தொடருக்கான 30 பேர் கொண்ட உத்தேச அணியை அறிவித்துள்ளது. இத் தொடரில் அணித் தலைவராக ரிக்கி பொன்டிங்கும் துணை அணித் தலைவராக கில்கிறிஸ்டும் தேர்ந் தெடுக் கப்பட்டுள்ளனர். அணி வருமாறு,

பொன்டிங் (அணித்தலைவர்) கில்கிறிஸ்ட் (உபஅணித்தலைவர்) ஹைடன்ஹாடிச், டேமியன்மார்டின், சைமண்ட்ஸ், மெக்ராத் ,பிரட்லீ, டிராவிஸ் பெர்ட், போலிங்கர், பிரக் கன், ஸ்டுவர்ட் கிளார்க், மைக்கேல் கிளார்க், காஸ்குரோவ், டான் கல்லன், பிரட்டோரே, ஹிபன் ஹாஸ், பிரட் ஹொக், பிரட் ஹாஜ், ஜேம்ஸ் ஹோப்ஸ், மைக்கேல் ஹுசே, டேவிட் ஹுசே, மிட்சல் ஜான்சன், லீவிஸ், பில்ஜோக்ஸ், ஷான் மார்ஸ் ஷோன் டைட் பிரட் ஹட்டின், ஷேன் வொட்சன் மற்றும் கேமரூன் வொயிட்.

## முழு உடல் தகுதி அடைந்தமையால்தான் இலங்கை முத்தரப்புத் தொடரில் சச்சினுக்கு வாய்ப்புக் கிடைத்தது

### கப்பலின் கூற்றுக்கு கிரிக்கெட் சபை பதிலடி

சச்சின் டெண்டுல்கர் முழு உடல் தகுதி பெற்றுவிட்டார். அவரது உடல் தகுதியில் முன்னேற்றம் இல்லையெனில் இலங்கை முத்தரப்பு தொடருக்கு சச்சின் தேர்வாகியிருக்க மாட்டார் எனபயிற்சியாளர் சப்பலுக்கு இந்திய கிரிக்கெட் சபை பதிலடி கொடுத்துள்ளது.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தோள்பட்டை காயத்தின் காரணமாக சத்திரசிகிச்சை செய்து கொண்டார். நான்கு மாதங்களாக சர்வ தேச தொடர்களில் பங்கேற்கவில்லை. போதிய ஓய்வுக்குப் பிறகு சிறிது காலம் லண்டனில் பயிற்சி மேற்கொண்டார். அவரது பயிற்சியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. இந்நிலையில் சச்சின் முழு உடல் தகுதிபெற்றுவிட்டதாக அணியின் உடல்தகுதி நிபுணர் ஜோன் குளோஸ்டர் கிரிக்கெட் சபையிடம் தெரிவித்தார் அதன்பிறகு இலங்கை முத்தரப்பு தொடருக்கான இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கர் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று இந்திய அணி பயிற்சியாளர் கிரெக் சப்பல் அளித்த பேட்டியில் 'சச்சின் 100 சதவீதம் உடல் தகுதி பெறவில்லை.

எல்லைக் கோட்டருகே நின்று பந்தை எறியும் போது அவர் சிரமப்படுகிறார்' என்று கருத்துத் தெரிவித்தார். சாப் பலின் பேட்டிக்கு கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் பதிலடி கொடுத் துள்ளது.


இது குறித்து கிரிக்கெட் சபையின் செயலர் நிரஞ்சன் ஷா கூறியதாவது சச்சின் டெண்டுல்கர் முழு உடல் தகுதி பெற்றுவிட்டார். உடல் தகுதியில் போதிய முன்னேற்றம் காணப்பட்டதால் தான், அவரை இலங்கை முத்தரப்பு தொடருக்கு தேர்வாளர் கள் தேர்ந்தெடுத்துள்ளனர். மேலும் அணியின் உடல் தகுதி நிபுணர் ஜோன் குளோஸ்டரின் மருத்துவ அறிக்கையை பரிசீலித்த பிறகு தான்சச்சினை கிரிக்கெட் சபை அணியில் சேர்த்தது. இவ்வாறு ஷா கூறினார்.

## இந்திய அணியில் கங்குலி மனைவி டோனா நம்பிக்கை

இந்திய அணியில் கங்குலி மீண்டும் இடம்பிடிப்பார் என்று அவரது மனைவி டோனா நம்பிக்கை தெரிவித்துள்ளார். போபாலில் நடக்கும் கலை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க சென்ற இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் தலைவர் கங்குலி மனைவி டோனா அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது,

எனது கணவர் கங்குலி மிகவும் அமைதியான சுபாவம் கொண் டவர். இந்த சுபாவம் அவருக்கு என்னால் வந்தது கிடையாது. அவர் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆட்டத்தின் போக்கு காரணமாகவே மைதானத்தில் அக்ரோஷமாக செயல்படுகிறார். மற்றப்படி அவர் எப்போதும் அமைதியை விரும்பக்கூடியவர். இந்திய அணியில் எனது கணவர் மீண்டும் இடம் பிடிப்பார் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

சச்சின் டெண்டுல்கரின் ஸ்டிரோக் ஆட்டத்தை எளிதில் யாருடனும் ஒப்பிட முடியாது. எல்லா கிரிக்கெட் ஆட்டத்தையும் உன்னிப்பாக கவனிக்கும் பழக்கம் கிடையாது. அதே நேரத்தில் முக்கியமான ஆட்டங்களை பார்க்கதவறுவது இல்லை. எங்களது 4 வயது மகள் சானா நடனம் மற்றும் இசை கற்றுக்கொள்வதில் மிகவும் ஆர்வமாக இருக்கிறாள். அவளது தந்தையின் தொழிலான கிரிக்கெட் மீது அவளுக்கு நாட்டம் இல்லை.



அகுரா கிளாசிக் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் சான்டியாகோ நகரில் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில், ரஷ்யா வின் மரியா ஷரபோவா 7-5, 7-5 என்ற நேர் செட்களில் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்சை வீழ்த்தினார். கோப்பை வென்ற மகிழ்ச்சியில் புன்னகை பூக்கும் ஷரபோவா.

## இலங்கை -தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர்

# இரண்டாவது போட்டியிலும் இலங்கை அணி திரில் வெற்றி

### மஹேல ஜெயவர்த்தனா சதம்

மஹேல ஜெயவர்த்தனாவின் சிறப்பான சதத்தினால் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஒரு விக்கெட்டால் தென்னாபிரிக்காவை வெற்றி பெற்று தொடரை 2-0 எனத் தனதாக்கியது. இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள தென்னாபிரிக்க அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணி இனிங்ஸ் மற்றும் 153 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தொடரின் இரண்டாவது டெஸ் கடந்த நான்காம் திகதி முதல் நேற்று வரை கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்று வந்தது.

இப் போட்டியில் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களை பெற்றிருந்த இலங்கை அணி ஐந்தாவதும் இறுதியுமான நாளில் நேற்று 90 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது இலங்கை அணி.

மஹேல ஜெயவர்த்தனாவின் சிறப்பான 123 ஓட்டங்களுடன் இலங்கை அணி நேற்று தேநீர் இடைவேளைக்கு முன்னதாக 9 விக்கெட்டுக்களை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

ஒரு நிலையில் கிரிக்கெட் ரசிகர்களை ஆசனத்தின் நுனிக்கே கொண்டு வந்து விட்டது. காரணம் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 348 ஓட்டங்களை பெற்றிருந்தது.

களத்தில் மகரூப் ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்தார். மறு முனையில் முரளிதரனுக்கு அன்ரூ ஹோல் அச்சுறுத்தலாக பந்து வீசிக்கொண்டிருந்தார்.

எனினும் முரளி தனது விளாசல் துடுப்பாட்டத்தினால் இரண்டு ஓட்டங்களைப்பெற்றுவிட்டார். இன்னும் இரண்டு ஓட்டங்கள்தான் என ரசிகர்கள் நிம்மதியடைய அடுத்த பந்தில் முரளிதரன் ஹோலின் பந்தில் நேரடியாக போல்ட் செய்து ஆட்டமிழந்தார்.

முரளியைத் தொடர்ந்து மலிங்க களமிறங்கினார். ஒருவழியாக ஹோலின் ஓவர் நிறைவடைந்தது. மறு முனையில் நல்ல போர்மில் துடுப்பெடுத்தாடிய மகரூப் பொயேயின் பந்தை எதிர்கொண்டு ஒரு ஓட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதனால் போட்டி சமநிலை அடைய ரசிகர்களுக்கு நிம்மதி பிறந்தது. எனினும் போட்டியை வெற்றி பெற ஒரு ஓட்டம் தேவை. பொயேயின் சிறப்பான சுழலை மலிங்க எதிர்கொண்டார்.

ஒரு வழியாக ஒரு பந்தைச் சமாளித்துவிட்டார் அடுத்த பந்தில் மிடோன் திசையில் ஒரு ஓட்டத்தைப் பெற்றுக்கொள்ள இலங்கை அணி வெற்றி பெற்று விட மைதானத்தில் ரசிகர்கள் வெடிகொளுத்தி உற்சாகமாக கொண்டாடினார்கள்.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 123 ஓட்டங்களையும் சனத்ஜெயசூரிய 73 ஓட்டங்களையும் மற்றும் சங்கக்கார 39, விக்கெட் [illegible]பர் பிரசன்ன ஜெயவர்த்தன 30 ஆட்ட[illegible]க்காமல் மகரூப் 159 பந்துகளை எதிர்கொண்டு 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக சுழல்பந்து வீச்சாளர் நிக்கி பொயே நான்கு விக்கெட்டுக்களையும் அன்ரூ ஹோல் மூன்று விக்கெட்டுக்களையும் மற்றும் நிற்னி, பொலக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணி முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 361 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 311 ஓட்டங்கல்ளயும் பெற்றது. இலங்கை அணி தனது முதலாவது இனிங்ஸில் 321 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இரண்டாவது இனிங்ஸில் 123 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியின் வெற்றிக்கு வழிவகுத்த மஹேல ஜெயவர்த்தனாவிற்கும் இத்தொடரின் நாயகனாக முதலாவது டெஸ்டில் பத்து விக்கெட்டுக்கள் இரண்டாவது டெஸ்ட் டில் 12 விக்கெட்டுக்கள் என தொடரில் 22 விக்கெட்டுக்களை வீழ்த்திய முத்தையா முரளிதரனுக்கு வழங்கப்பட்டது.

## இன்று ஒரு தகவல்

### உண்மையான தோற்றம்

"தெரியாத்தனமாக இந்த வீட்டைக் கட்டி விட்டேன் சார்!" அப்படி என்று கவலைப்பட்டார் ஒருவர் "என்ன விவரம்?" என்றேன். "அடுப்பங்கரை சரியில்லை... படுக்கை அறை சரியில்லை... வரவேற்பு அறை நான் நினைத்த மாதிரி அமைய வில்லை..." என்று அடுக்கிக் கொண்டே போனார்

"ஏன் சார் ...முதலில் வரைப்படம் எல்லாம் போட்டுப் பார்த்துத்தானே கட்டினீர்கள்?" என்றேன். வரைபடத்தில் பார்க்கின்ற போது சரியாகத்தான் இருந்தது... இப்போது நேரில் பார்க்கின்ற போதுதான் என்ன இடைஞ்சல் என்பது புரிகிறது" என்றார்

இது மாதிரி ஆசாமிகள் எல்லாம் இனிமேல் கவலைப் படவேண்டியதில்லை. Virtual Reality வந்துவிட்டது. அது என்ன வர்ச்சுவர் ரியாலிட்டி? அது தான் உண்மையான தோற்றம்!" இது ஒரு புதிய தொழில் நுட்பம்.

நீங்கள் உங்கள் வீடு அல்லது சமையலறை எப்படி இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ அதைச் சொல்ல வேண்டியது எவ்வளவு நீளம், அகலம், உயரம் சுவருக்கு என்ன கலர் அடிக்க வேண்டும் எல்லாவற்றையும் விபரமாகச் சொன்ன பிறகு அதை அப்படியே கம்பியூட்டர் திரையிலே கொண்டு வந்தவர்கள்... சாதாரணமாக நாம் பார்க்கின்ற மாதிரி இல்லை... முப்பரிமாண படமாகப் பார்க்கலாம் Three Dimensional Graphical Modeling System முப்பரிமாண வரைபட முன்மாதிரித் திட்டம்.

ஒரு தனி அறைக்குள் நீங்கள் நுழைய வேண்டியது Graphics workStation என்று பெயர் அந்த அறைக்கு! அங்கு பார்த்தீர்கள் என்றால்.. நீங்கள் கற்பனை பண்ணி வைத்திருக்கிற சமையல் அறை நிஜமாகவே உங்கள் கண்முன்னால் தெரியும்! உங்கள் கையில் ஒரு! "ரிமோட்"டைக் கொடுத்து விடுவார்கள்.

நீங்கள் அந்த சமையலறையை எந்தக் கோணத்தில் வேண்டும் என்றாலும் பார்க்கலாம். அதில் உள்ள கப் போர்டுகள், டிராயர்கள் இதையெல்லாம் திறந்து பார்க்கலாம் விளக்குகளை எரிய வைக்கலாம்.

சமையல் பாத்திரங்களை நகர்த்தலாம் ஜன்னல் கதவைத் திறக்கலாம்....மூடலாம்.... சுவற்றிலே இருக்கிறகலர் பிடிக்கவில்லையா... வேறு கலருக்கு மாற்றலாம்.

என்னென்ன மாறுதல் வேணுமோ:.. அதை செய்து கண்ணால் பார்த்துவிட்டு அதற்கப்புறம் நிஜசமையல் அறையை கட்டிவிடலாம்.

அதற்கப்புறம் நான் நினைத்தமாதிரி இது அமையவில்லையே!" என்கிற பிரச்சினை வராது நிஜத்திலே ஒன்றை செய்வதற்கும் கண்முன்னால் நிஜம் போலவே அதை ஒரு தடவை உணர்ந்து பார்க்கிறது இருக்க பாருங்கள் அது தான் Virtual Realityl.

இந்தத் தொழில் நுட்பம் சும்மா சமையலறை கட்டுவதற்கு மட்டும்தான் உபயோகம் என்று நினைத்து விடாதீர்கள்! ஒரு கார்க் கம்பெனி புதிதாக ஒரு மாடல் கார் தயாரிக்க வேண்டும் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அதன் வடிவத்தை இப்படி 3-D கம்பியூட்டர் கிரா.'.பிக்ஸ்லேகொண்டு வந்து ஊழியர்களுக்குப் போட்டுக் காட்டலாம். அவர்கள் அதை நன்றாகப் புரிந்து கொண்டு வேலை செய்வதற்குசௌகரியமாக இருக்கும்!

கம்பியூட்டர் தன்னிடம் இருக்கும் தகவல்களை இந்த V.R சிஸ்டத்திலே உருவமாக மாற்றி அமைக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்... நீங்கள் அந்தக் காரை சுற்றி வந்து பார்க்கலாம் ஓட்டிப் பார்க்கலாம் விபத்துக்கு உள்ளாக்கிக்கூடப் பார்க்கலாம்.

இப்போதெல்லாம் இந்த Virtual Reality சிஸ்டம் தலைக்கவசம் (Helmet) மாதிரியே வந்துவிட்டது. தலையிலே மாட்டிக்கொண்டு பொத்தானை தட்டி விட்டால் போதும் கண்களிலே முப்பரிமாணகாட்சிகள் தெரியும். காதுகளிலே அதற்கான ஒலிகள் கேட்கும். மனிதன் அந்த சூழ்நிலையிலே வாழ முடியும்.

இப்போது உதாரணத்திற்கு ஒரு விமானம் ஓட்டிப் பார்ப்பது மாதிரியான நிகழ்ச்சி என்றால் நீங்கள் நிஜமாகவே பறக்கிறது மாதிரி உணர்வீர்கள். அது மாதிரி கடலிலே நீந்தலாம் இதற்கான கம்பியூட்டர் டிஸ்க்குகள் எல்லாம் வந்துவிட்டது.

இது ஒரு கம்பியூட்டர் விளையாட்டு குழந்தைகள் எல்லாம் இந்த ஹெல்மெட்டைத் தலையிலே மாட்டிக்கொண்டு ஆகாயத்தில் பறக்கலாம் கடலுக்குள்ளே போகலாம்...

கம்பியூட்டர் புரட்சி அந்த அளவுக்கு போய்கொண்டிருக்கிறது. நம்ம ஆள் ஒருத்தன் இ... தன் வருங்கால மனைவி எப்படி இருக்கணும் என்று கம்பியூட்டரிடம் யோசனை கேட்டான்.

"வரப்போகிற மனைவி சிவப்பாக இருக்கவேண்டும்... நான் ஏதாவது சொன்னால் அதை செய்யவேண்டும் துணிமணிகள் எல்லாம் சுத்தமாக துவைக்கவேண்டும் அப்படிப்பட்டமனைவி தேவை!" என்றான். கம்பியூட்டரிடம் இருந்து உடனே ஒரு பதில் வந்தது... "சிவப்பு கலரிலே ஒரு வாஷிங் மிஷினைக் கல்யாணம் பண்ணிக்கொள்!" அப்படி என்று.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மக்களுக்குச் சேவை செய்வதில் யாழ் லயன்ஸ் கழகங்களுக்கிடையே போட்டி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வரும் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306பி. மாவட்டத்தில் இயங்கி வரும் 15ற்கும் மேற்பட்ட லயன்ஸ்கழகங்கள் மத்தியில் -பொதுமக்களுக்கான சேவைத்திட்டங்களை அமுல் செய்வதில் கழக நிர்வாகிகள் பெரும் ஆர்வத்துடன் செயற்பட்டுவருகின்றனர்.

இம்மாவட்டத்தில் சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், தீவகம், வடமராட்சி, அச்சுவேலி, மானிப்பாய், கொக்குவில் போன்ற இடங்களில் இயங்கி வரும் லயன்ஸ் கழகங்கள் ஒவ் வொரு மாதமும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெறு மதி மிக்க செயல் திட்டங்களை அமுல் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

306 பி. மாவட்டத்தின் கீழ் இயங்கிவரும் 56 லயன்ஸ் கழகங்களுள், திட்டங்கள் அமுல் செய்வதிலும் பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதிலும் எந்தக் கழகம் முன்னிலை இடத்தை கைப்பற்றும் என்ற வகையில் ஆரோக்கியமான போட்டிகள் நிலவி வருவதாகவும் அறியப்படுகின்றது.

இதேவேளை, ஒவ்வொரு லயன்ஸ்கழகத்திலும் இருக்கக்கூடிய அனுபவமும் -தேர்ச்சியும் உள்ள கழக அங்கத்தவர்கள் நிர்வாகிகளை அவ்வப்போது வழி நடத்தி எந்தக் கழகம் முன்னிலையில் முன்னணி ஸ்தானத்தை இவ்வருடம் கைப்பற்றுவது என்ற ரீதியில் இயங்கி வருகின்றது.

அதிகமான லயன்ஸ்கழகங்களில் தலைமைப் பதவிகளை பிரபல்யம் மிக்க வர்த்தக பிரமுகர் அலங்கரித்து வருவதனால் அத்தகையவர்கள் பொதுமக்களுக்கான சேவைத்திட்டங்களை வழங்குவதில் பெரும் நிதியைப் பயன்படுத்தி வருவதாகவும் தெரியவருகின்றது.

லயன்ஸ் கழகங்களின் சேவைத்திட்டங்கள் அமுலாக்கல் விடயத்தில் கடந்த 25 வருடங்களாக நிலவி வராத ஒரு தன்மை இப்போது ஏற்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருப்பதாக கழகங்களில் இருக்கின்ற மூத்த உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (து-16)

## புதிய பஸ் கொள்வனவுக்கு ஒரு இலட்சம் ரூபா தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு வழங்க முடிவு

(கொழும்பு)

10 வருடத்திற்கு மேல் பழமையான பஸ்களுக்கு பதிலாக புதிய பஸ்களை பெற்றுக்கொள்வதற்காக தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவை வழங்குவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இந்தப் பணத்தை மீள அறவிடப்போவதில்லை என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எல்லே விமலரத்தின தெரிவித்துள்ளார்.

இதற்கென திறைசேரி எட்டுக்கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் இம்மாதம் 18ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

விண்ணப்பப்படிவங்களை மாகாண சபையின் போக்குவரத்து அத்தியட்சகர் காரியாலயங்களிலும் தேசிய போக்கவரத்து ஆணைக்குழுவின் காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும். (து-9)

## தேடுதல் வேட்டையில் வெடிபொருட்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான் குடி பிரதேசத்தில் அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை ஒன்றின் போது கணிசமான அளவு வெடிபொருட்களை மீட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் இருந்து 650 கிராம் வெடிபொருட்கள் 5 கிலோக்கிராம் ஈயம், 9 மின் கலங்கள், தொலை நோக்கி, மின் கடத்திகள், எரிபொருள் கொள்கலன் என்பன அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல் மையம் அறிவித்துள்ளது. (து-9)

## கடைசி இரவு பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து சகல இடங்களுக்குமான கடைசி பஸ் சேவை இரவு 7 மணிக்கு நடைபெறும் என வடபிராந்திய போக்குவரத்து முகாமையாளர் அறிவித்துள்ளார். (து-75)

## தொண்டர் நிறுவன ஊழியர் கொலைக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம்

(கொழும்பு)

மூதூரில் பிரான்ஸ் தொண்டர் நிறுவனத்தின் ஊழியர்கள் 15 பேர் கொலை செய்யப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் உடனடியாக கைதுசெய்யப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்தை கேட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களே மூதூரில் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ''அக்ஸன் எகைன்ஸ் ரஹங் கர்'' என்ற தொண்டு நிறுவனத்தில் கடமையாற்றியவர்களாவர்.

கொலை செய்யப்பட்டவர்கள் தமதுநிறுவனத்தின் அடையாளச் சின்னம் பொறிக்கப்பட்ட டீ-சேட்க்களை அணிந்திருந்ததாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவர்களின் தலையில் துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள் காணப்படுவதாக நிறுவனம் மேலும் தெரிவித் துள்ளது. இதேவேளை சுனாமி புனரமைப்புத்தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதியான முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் இந்த படுகொலை சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள் ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ள அவர் குற்ற வாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரியுள்ளார். (து-7)

## 700 ரூபா திருடியவருக்கு 3ஆயிரம் ரூபா அபராதம்

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் அச்சுவேலி பஸ்ஸில் 700 ரூபாய் பணத்தை திருடிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நவரத்தினம் சிவரூபன் கைதடிச்சந்தி கைதடி என்பவரது வழக்கு நேற்று யாழ். மாவட்ட நீதிபதி வி.த.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையை மேற்கொண்ட நீதிபதி கைது செய்யப்பட்டவரை குற்றவாளியாக கண்ட நீதிபதி அவருக்கு மூன்று வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத் தண்டனை விதித்ததுடன் மூவாயிரம் ரூபாய் தர்மப் பணத்தை கானான் சிறுவர் இல்லத்திற்கு செலுத்துமாறு உத்தரவிட்டார். (து-133)

## இயல்பு நிலைக்குத் திரும்பாத திருமலை, மூதூர் நகர்

(திருகோணமலை)

திருகோணமலை மற்றும் மோதல் நடந்த மூதூர்ப் பகுதிகளில் இயல்பு நிலை இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லை எனவும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட எவரும் அப்பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலை தொடர்வதாகவும் பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் 28ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இதுவரை அகதிகளுக்கான நலன்புரி நிலையங்களில் நம்மைப்பதிவு செய்திருப்பதாகவும் இவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள் என்றும் இவர்களின் நலனுக்காக திருகோணமலை நகர், கந்தளாய், சேருநுவர மற்றும் செருவில ஆகிய இடங்களில் குறைந்தது 19 நலன்புரி நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டதாகவும் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் மேஜர் ஜெனரல் டி.டி.ஆர் சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மூதூர் கிழக்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இடம்பெறும்வான் மற்றும்எறிகணைத் தாக்குதல்களால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக் கானோர் எந்தவித உதவியின்றியும், பொருளாதார தடையினாலும் அல்லலுறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (து-2)

## கந்தளாயில் தமிழர்களுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

கந்தளாயில் நிரந்தரமாக வாழும் தமிழர்களுக்கு மூதூரில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழும் சிலர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அப்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மருந்து எடுக்கச் சென்ற ஒருவர் வழி மறிக்கப்பட்டு இனந்தெரியாத குழுவொன்றினால் தாக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து பொலிஸாரிடம் அப்பிரதேச மக்கள் முறையிட்டபோதும் பெருமளவிலான மக்கள் இடம் பெயர்ந்து இருப்பதனால் கட்டுப்பணிகளை ஏற்படுத்த சிரமங்கள் இருப்பதாகவும் முடிந்தவரை நடமாட்டங்களை குறைக்குமாறு பொலிஸார் ஆலோசனை கூறியதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இது குறித்து நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு கந்தளாய்பிரதேச தமிழ் மக்கள் பொலிஸாருடன் விஷேட சந்திப்பொன்றை நடத்தியதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல் தெரிவிக்கின்றன. (து-2)

# பட்டுழ யாதினித்துயரம்; பட்டதெல்லாம் போதுமே!

நேற்று ் ன்தினம் யாழ்.விழிப் புலனற்றோர் சங்கத்தால் நடாத்தப் பட்ட சமாதானப் பேரணியின் முடிவில் ஜனாதிபதி, ஐ.நா.செயலாளர் நாயகம், த.வி.புலிகள், நோர்வே அரசு, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்குக் கையளிக்கப்பட்டதற்காக யாழ். அரச அதிபரின் கையளிக்கப்பட்ட மகஜரில்,

கொடிய யுத்தம் ஒன்று மீளவும் எமது நாட்டில் ஆரம்பித்துவிடுமோ என்ற அச்சம் எமது மனங்களிலே எழுந்திருக்கிறது. மீண்டும் ஒரு யுத்தத்தைச் சந்திக்கக்கூடிய அல்லது ...க்கூடிய பலம் எம்மிடம் ... யில் யுத்தத்தின் கொடிய விளைவுகளை நாம் சந்தித்து வி...க்தியில் வாழ்கின்றோம்.

யுத்தத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் பல. குறிப்பாக பலர் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டு அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் அங்க இழப்பை எதிர்கொள்ளும் ஒருநபர் உடல் உள சமூக பொருளாதாரப் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது. பிறப்பினாலும் அங்கவீனர்களாய் இருப்போர் பல பாரிய உளநெருக்கீடுகளை சந்திக்கின்றனர்.

கடந்த பலதசாப்த காலங்களிலே யுத்தத்தின் கெடுபிடிகளால் அங்கவீனர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகின்றது. இப்படிப்பட்ட அவலநிலை மீண்டும் ஏற்படாதவாறு எம்மைக் காத்துக் கொள்வது அனைவரினதும் கடமையாகும் அங்கவீனர்களின் தொகை அதிகரித்துக்கொண்டு போகின்றபொழுது அது குடும்பங்களையும், சமூகத்தையும் ஏன் நாட்டையுமே ஒரு சாபக்கேட்டிற்கு உள்ளாக்குகிறது.

மீண்டும் ஒரு யுத்தமேற்படாமல் விழிப்புடனிருப்பது மட்டுமல்ல. நிலையானதொரு சமாதானத்திற்கான முயற்சிகள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலுவிழந்தவர்களாகிய நாம் சம்பந்தப்பட்டவர்களை வேண்டி நிற்கிறோம்.

தற்போது நிலவிவரும் யுத்த சூழலைத் தவிர்த்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்று பொறுப்பானவர்களை வேண்டுகின்றோம்.

அங்கவீனர்கள் சுதந்திரமாக நடமாடவும் பயணஞ்செய்யவும் கூடியதொரு சூழலை ஏற்படுத்தித் தர வேண்டுகின்றோம்.

சமாதானப்பேச்சு வார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அமைதிக்கான ஒருவழிமுறையை காணும் முயற்சியில் அர்ப்பணத்தோடு செயற்படவேண்டுமென்று ஆவலோடு கேட்கின்றோம்.

அங்கவீனர்களாகப் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் என்று பொறுப்புள்ளவர்களைக் கேட்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (து-133)

# சர்வமதப் பேரணியும் சமாதானப் பேரணியும்

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து ஊனமுற்றவர்களும் இணைந்து நடத்திய சர்வமதப் பிரார்த்தனையும் சமாதானப் பேரணியும் நேற்றுக்காலை 11.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் விழிப்புலனற்றோர் சங்கத்தலைவர் ஆசைப்பிள்ளை மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

சர்வமதக் குருமார்கள், யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் தலைவர் எஸ்.பரமநாதன், அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் எ.கே. சிவசுப்பிரமணியம் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விழிப்புலனற்றோர் சங்கத்தினால்ஏற்பாடுசெய்யப்பட்ட ஊர்வலம் கே.கே.எஸ். வீதியூடாக ஆஸ்பத்திரி வீதிவழியே யாழ்.மாவட்டச் செயலகத்தை சென்றடைந்து அரச அதிபரிடம் மகஜரொன்றைக் கையளித்தது.

மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, ஐ.நா.செயலாளர் நாயகம், தமிழீழ விடுதலைப்புலிகள், நோர்வே அரசு, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு அனுப்பிவைப்பதற்காக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (து-133)

# பரிசளிப்பு விழா

இணுவில் என்.சி.ஏ.கல்விநிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவும், பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை பகல் 1.00 மணிக்கு மேற்படி கல்வி நிலையத்தில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசா கலந்து கொள்ளவுள்ளார். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (து-36)

# இராசிபலன்

**09.08.2006**
**(ஆடி 24, புதன்கிழமை)**
**பூரணை மாலை 5.34 மணிவரை**
**திருவோணம் முன்னிரவு 7.04 மணிவரை**
**இராகுகாலம் 12.04-1.34 மணிவரை**
**சுபநேரம் 4.34-6.04 மணிவரை**
**பூரணை விரதம்**
**நோன்மதி தினம்**

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்ச்சி, உற்சாகம், நல்ல செய்தி, காரிய அனுகூலம். |
| இடபம் | ஆன்றோர் ஆசி, உடல்உழைப்பு, அச்சமான நிலை, புதிய முயற்சி. |
| மிதுனம் | எதிர்பாராத அச்சம், உடல்நலக் குறைவு, காரியதடங்கல், திடீர்நன்மை. |
| கடகம் | வாகனவசதி, அபூர்வசந்திப்பு, கௌரவமான நிலை, காரியசித்தி. |
| சிம்மம் | பணவருவாய், நோய் குணமடைதல், சத்துருஜெயம், திடீர்பயணம். |
| கன்னி | காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், வாக்கு மேன்மை, வியாபார விருத்தி. |
| துலாம் | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | இனிய அனுபவம், வாக்கு மேன்மை, காரிய நன்மை, சகோதரர் உதவி. |
| தனுசு | மதிப்புக்குறைவு, பணவிரயம், முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| மகரம் | நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், ஜனவசியம். |
| கும்பம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படல், முயற்சி தாமதம், சுபசெலவு. |
| மீனம் | தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, கீர்த்தி, முயற்சி கைகூடும். |

- வளவன்

# தொலைக்கல்வி ஆசிரியர் சங்கக்கூட்டம்

தொலைக்கல்வி ஆசிரியர் சங்க கூட்டம் 9.8.2006 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதுவரை ஆசிரிய பயிற்சி சான்றிதழ் கிடைக்காதவர்களும் பெறுபேற்று விபரச்சான்றிதழ் கிடைக்காதவர்களும் அதனை பெற்றுக்கொள்ளுமாறு தொலைக்கல்வி நிர்வாக பணிப்பாளர் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக சங்க தலைவர் தி.ரவீந்திரநாதன் தெரிவிக்கின்றார்.

தொலை கல்வி ஆசிரியர்கள் பிரச்சினைகள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (து-136)

# தமிழ் மொழித்தின நிகழ்வுகள்

(கோண்டாவில்)

கோப்பாய்க் கோட்டப்பாடசாலைகளுக்கிடையேயான தமிழ் மொழித்தின நிகழ்வுகள் இன்றும் நாளையும் கோப்பாய் கிறிருஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கோட்டக்கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் தெரிவித்துள்ளார். (து-79)

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.


இந்நிகழ்வில் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தலைவர் கப்ரின் வி.ஏ.எம்.குணசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இந்த உதைபந்தாட்டப் போட்டி ஆனைக்கோட்டை யூனியன் 'ஏ' அணிக்கும் ஆனைக்கோட்டை யூனியன் 'பி' அணிக்கும் இடையே நடைபெறும். (து)

# அடிப்படை சிங்கள மொழிப்பரீட்சை

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் 2005ஆம் வருடம் அரசாங்க அலுவலர்களுக்கு நடைபெற்ற அடிப்படை சிங்கள மொழிப்பயிற்சியை பூர்த்திசெய்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கடந்த வருடம் அடிப்படை சிங்கள மொழிப் பரீட்சையில் தோற்றி சித்தி அடையாதவர்களும் இப் பரீட்சைக்கு தோற்ற முடியும் என பிராந்திய ஆணையாளர் தெரிவித்துள்ளார். (து)

# நல்லூரான் திருவடிக்கு இன்று பதினொராம் திருவிழா



## மயிலே ஆடு

ஆடுமயிலே கூத்தாடுமயிலே!
நல்லூரான் கந்தனென்று ஆடுமயிலே
ஏறுமயிலே நீ ஏறுமயிலே ஏழுமலை முருகனிடம்
(ஏறுமயிலே)
கூறுமயிலே நீ கூறுமயிலே
கொடுமைகளைக்களைந்திடென்று கூறு
(மயிலே)
பாடுகுயிலே நீ பாடுகுயிலே
அழகுக்கந்தன் திருப்புகழைப்பாடுகுயிலே!
அனைத்துலகைக் காப்பாய் என்று பாடுகுயிலே!



கே.சி.வதனா தெல்லியூர்

## நல்லூர் வீதிதனில் நடந்தால்...

நல்லூர் வீதி நடந்தாலே
நாதன் அருளே கிட்டிவிடும்
எல்லா வினையும் தீர்ந்துவிடும்
என்றும் அமைதி தோன்றிவிடும்
கொல்ல வந்த பகைகூட
கும்பிட்டு அகன்று சென்றுவிடும்
நல்ல குணமும் நற்செயலும்
நாளும் எம்மை நாடிவரும்!



கவிஞர் வ.யோகானந்த சிவம்

## தம்பி அழுவது கேட்குதா?

தேவர் சிறை மீட்ட நாதனே
தம்பி அழுவது கேட்குதா
பாவவினை போக்கும் வேலனே
பக்தர் துயர் தீர்க்க தாமதமேன்?
வேகமாகத் தினம் வருகிறாய்
வீறு கொண்டு நலன் காக்கவா
பாகமாக வேல் பெற்றவா
பணியும் வரமாத தினமும் தா?

அ.கலாநிதி

## நலம் காண வைத்திடு

கந்தனே, உன் கருணை விழிகண்டால்
கவலைகள் பறந்து ஓடிடுமே
வந்தனை செய்து வாயால் உன்புகழ்பாட
வல்வினைகள் விலகி ஓடிடுமே
சிந்தையிலே உன்னை சந்ததமும் வைத்தால்
சஞ்சலங்கள் யாவும் விலகிடுமே
எத்தனை ஆண்டிலும் நல்லூர் குமரனே
எல்லோரும் நலம்காண வைத்திடுவாய்

நி.சுகப்பிரதா

# நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நல்லூர் உற்சவ கால பதினொராம் நாள் நிகழ்வான 'ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப்பிரார்த்தனை' நிகழ்வு இன்று பி.ப 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபி விருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'அருணகிரியும் திருப்புகழும்' என்னும் தலைப்பில் பாலசண்முகன் உரை நிகழ்த்துவார். மாதகல் விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களது கூட்டுப்பிரார்த்தனையும் இடம் பெறும். (து-133)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்


இல: 29

ஆக்கம்: மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை


வினாத்தாள் – I நேரம்: 45 நிமிடம்

கீழேயுள்ள உருவங்களில் மூன்று உருவங்கள் ஏதோ ஒரு வகையில் ஒத்திருக்கின்றன. இரு உருவங்கள் வேறுபட்டுள்ளன. வேறுபட்ட உரு வங்களின் கீழ்ப் புள்ளடியிடுக.

1.




2.




கீழே தரப்பட்டுள்ள உருக்களில் முதலாவது உருவுக்கும் இரண்டாவது உருவுக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்புண்டு. அதேபோன்று மூன்றாவது உருவுடன் தொடர்புடைய உருவின் கீழ்ப் புள்ளடியிடுக.

3.





4.




பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

5. இரத்தம் - குருதி - ஈகை (கொடை, தானம், வாங்குதல்)
6. அபாயம் - ஆபத்து - அற்புதம் (ஆனந்தம், மகிழ்ச்சி, புதுமை)
7. ஆரம்பம் - முடிவு - வெற்றி (சிறப்பு, தோல்வி, முதன்மை)

படங்களை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.
(1 சதுரத்தின் நீளம் 1 cm).




8. பரப்பளவில் மிகக்கூடிய உருவம் எது?
....................
9. சமமான பரப்புடையது எது?
....................
10. பரப்பளவில் மிகக்குறைந்தது எது?
....................
11. உருவம் A உருவம் B யின் மொத்தப் பரப்பளவு என்ன?
....................

சரியான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

12. லாயத்தில் கட்டப்படுவது
1. குதிரை 2. பன்றி 3. மாடு

13. வர்த்தகர் ஒருவரிடம் எப்போதும் இருக்க வேண்டியது
1. பொருட்கள் 2. தராசு 3. நேர்மை


14, 15ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

14.



ஆழி, குடா, குளம், பள்ளம்

15.




சூரியன், கிழக்கு, மேற்கு, வடக்கு

சரியான சொல்லட்டையின் கீழ்க் கோடிடுக.

| | | |
|---|---|---|
| 16. பல்களைக்கழகம் | பல்கலைக்களகம் | பல்கலைக்கழகம் |
| 17. முயற்சி | முயற்ச்சி | முயர்ச்சி |
| 18. பயித்தங்காய் | பயற்றங்காய் | பயத்தங்காய் |

கீழே தரப்பட்டுள்ள வினோத வினாக்களுக்கு விடை தருக.

19. எலியை எப்படிப் புலி ஆக்கலாம்
....................
20. கல்யாண வீட்டில் வாழை கட்டுவது ஏன்
....................
21. மதிசனிடம் உள்ள பணத்தின் இரு மடங்கு பணம் மதனிடம் உண்டு. மயூரன் மதனிடமுள்ள பணத்தின் 1/3 பங்கு பணம் வைத்திருக்கிறான். மதிசனிடம் 120 ரூபா உள்ளது. ஆயின் மயூரனிடமுள்ள பணம் எவ்வளவு?
....................
22. பவானி 32 kg 500g நிறையுடையவர். அகல்யா பவானியை விட 3kg 150g நிறையுடையவள். சுகந்தி அகல்யாவை விட 1 kg 350g நிறை குறைந்த வள் எனின் மூவரினதும் மொத்த நிறை என்ன?
....................
23. கோலத்தை அவதானித்து இடைவெளியை நிரப்புக.




சுருக்க விடை தருக.


24. நீரினால் பரவும் வித்துக்கள் 1.................. 2..................
25. காற்றினால் பரவும் வித்துக்கள் 1.................. 2..................
26. விலங்கினால் பரவும் வித்துக்கள் 1.................. 2..................

கீழே சில பறவைகளின் அலகுகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




27. ஊன் உண்ணும் பறவையின் அருகே M என்ற அடையாளம் இடுக.
28. தானியம் உண்ணும் பறவையின் அருகே R என அடையாளம் இடுக.
29. பழம் தின்னும் பறவையில் ஆரமுள்ளது ஆணா பெண்ணா ....................
30. முதலாவதாகவுள்ள பறவை எது
....................
31. பழம் தின்னும் பறவையின் அருகே 0 என அடையாளம் இடுக.

எமக்கு உதவுவோர் சிலரின் படங்கள் தரப்பட்டுள்ளன. சீருடைகளை அவதானித்து வெற்றிடங்களில் அவர்கள் யார் என்பதை எழுதுக.



32. .................. 33. .................. 34. ..................

கணனியின் இரண்டு பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை வெற்றுக்கோட்டில் எழுதுக.




35. .................. 36. ..................

உமது வகுப்பறையில் பின்வருவன தொடர்பாக நீர் ஏற்படுத்தும் மாற்றங்கள் ஒவ்வொன்றை எழுதுக.

37. வகுப்பறைக்குள் அழுக்கு வருவதைத் தடுத்தல்
....................
38. சகமாணவர்களின் சித்திர ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்
....................

(6 ஆம் பக்கம் பார்க்க)

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

39.





(1) காரியாலயங்கள் தொடங்கும் நேரம்

(2) பாடசாலை ஆரம்பமாகும் நேரம்

(3) மணித்தியாலச் செய்தி நேரம்

40.



(1) விளம்பர ஒளிபரப்பு நடைபெறுகிறது

(2) இன்றைய நிகழ்ச்சி நிரல் ஒளிபரப்பப்படுகிறது

(3) செய்தி வாசிப்பு நடைபெறுகிறது

## வினாத்தாள் – 27 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. கலா | 02. சுபா, விஜி, சுஜி | 03. கணிதம் |
| 04. சிவா, தனு, சுஜி, விஜி | | 05. விஜி, சுஜி |
| 06. தவமணி | 07. 16X6 | 08. கரை |
| 09. நரை | 10. பாறை | 11. திரை |
| 12. 8 | 13. 3X3X8 | 14. 32 |
| 15. 3 | 16. 3 | 17. 1 |
| 18. வளர்பிறை | 19. தேய்பிறை | 20. 3 |
| 21. 4 | 22. 4 | 23. 2 |
| 24. 3 | 25.1 | 26. தினசரி |
| 27. நகரம் | 28. சிறுவர்கள், சிறுமிகள், குழந்தை, பெண்கள், ஆண்கள் | |
| | 29. சிறுவர்கள், சிறுமிகள் | 30. 200 |
| 31. குழந்தை, சிறுவர்கள் | | 32. 100 |
| 33. 3 | 34. 3 | 35. 1 |
| 36. சரி | 37. பிழை | 38. சரி |
| 39. சரி | 40. பிழை | |

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் -27

## அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

01.பே.மேருஜா - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
02.தே.கார்த்தீபன் - யா/திரு இருத்யக் கல்லூரி.
03.நி.பிரசாந் - யா/காரைநகர் கலாநிதி அ.தி.ம.ம.வித்தி.
04.வ.சிந்துஜன் - யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.
05.யோ.நிதர்சன் - யா/அ.மி.த.க. பாடசாலை
06.நு.அனோஜன் - யாழ்ப்பாணக் கல்லூரி.
07.வி.டினேஷ்காந் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
08.நி.பகீரதன் - யா/துணவி அ.மி.த.க. பாடசாலை.
09.செ.கிருஷ்ணகுமார் - யா/துணவி அ.மி.த.க. பாடசாலை.

**புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்நோக்கும் பிள்ளைகளே!**

பதட்டமின்றிப் பரீட்சையை எதிர்நோக்குங்கள்

முயற்சி வெற்றியைத் தரும்
பயிற்சி உயர்ச்சியைத் தரும்

## பயிற்சிப் பரீட்சை

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டத்துக்குட்பட்ட தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இரண்டாவது கோட்ட மட்டத்திலான பயிற்சிப் பரீட்சை அண்மையில் நடைபெற்றது. இதற்கான அனுசரணையை அச்சுவேலி மக்கள் வங்கியினர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-79)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் வெளியிடப்படும் ஆனி மாத இதழ் அருள் ஒளி வெளிவந்துள்ளது. (அ-9)

# அழைப்புக் கட்டளை

## இல.16 பிரிவு 55 (1)

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கவிதன் பெண் கார்த்திகா
மறுநாமம்
கேசரி மாயவன் மகள் கார்த்திகா
213. பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வழக்கு இல: 695/ மணநீக்கம் — வழக்காளி

எதிர்

கதிரவேலு கவிதன்
மே/பா: சிவராசா
கேணிக்கிணற்றடி,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி தமக்கும் உமக்குமிடையேயான திருமணத்தை ரத்துச் செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006ஆம் ஆண்டு ஆவணி 23ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில்சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

துு.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைந்தவர்:-
சபா ரவீந்திரன்
வழக்காளியின் சட்டத்தரணி.

(C- 425)

# விஞ்ஞான வினாடி வினா போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தரம் 7-11 வரையான மாணவர்களுக்கிடையில் கடந்த மாதம் 16ஆம், 20ஆம் திகதிகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வலயக்கல்வி அலுவலகத்தால் நடாத்தப்பட்ட விஞ்ஞான வின்ாடி வினாப் போட்டிகளின் வலய மட்ட மற்றும் கோட்ட மட்ட முடிவுகள் வெளிவந்துள்ளன.

தமிழ் மொழி மூலம் வலய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வருமாறு,

**வலய மட்டப் போட்டி**
**(தமிழ்மொழி மூலம்)**

**தரம் -7**

1 ஆம் இடம்-எஸ்.சிவராம் - சென்ஜோன்ஸ் கல்லூரி. 2ஆம் இடம்- எஸ்.மேகலாதன் - யாழ்.இந்துக் கல்லூரி. 3ஆம் இடம்- ஏ.ஆன் அபிநயா- வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை. வி.விந்தியா- கொக்குவில் இந்துக் கல்லூரி.

**தரம் - 8**

1ஆம் இடம்-ஏ.சியாமினி- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 2ஆம் இடம்- எஸ்.விதுஷன்- சென்ஜோன்ஸ் கல்லூரி. 3ஆம் இடம்-பி.சகீதா- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. ஏ.ஹேமத் ராஷ்ஷன்- கொக்குவில் இந்துக் கல்லூரி.

**தரம் - 9**

1ஆம் இடம் - ஏ.அபிராமி- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 2ஆம் இடம் - எஸ்.டினோஜா - வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை. 3ஆம் இடம்- கே.வளர்மதி - நல்லூர் ஸ்ரேஷன் சி.சி.ரி.எம்.எஸ்.

**தரம்- 10**

1ஆம் இடம்- எஸ்.சுமங்கலி- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 2ஆம் இடம்- கே.லஜிந்தன்- யாழ்.இந்துக் கல்லூரி. எஸ்.கஜனானன் - கொக்குவில் இந்துக் கல்லூரி.

**தரம்- 11**

1 ஆம் இடம்- பி.குகநாத்- இடைக்காடு ம.வி. 2ஆம் இடம்- எம்.விந்துஜா- வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை. ரி.சுஞ்சயன்- யாழ்.இந்துக்கல்லூரி.

**வலய மட்டப் போட்டி**
**(ஆங்கில மொழி மூலம்)**

**தரம் - 7**

1ஆம் இடம்- ஆர்.பிரணவன்- யாழ்.இந்துக் கல்லூரி. 2ஆம் இடம்- எஸ்.தாரணி- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. எஸ்.சிவனியா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**தரம் - 8**

1ஆம் இடம்- எஸ்.சுமிதா- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 2ஆம் இடம்- எஸ். நிஷா- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 3ஆம் இடம்- சொலொமன் ராஜாராம் - சென்ஜோன்ஸ் கல்லூரி.

**தரம்- 9**

1ஆம் இடம்- வாஹினி- வேம்படி மகளிர் கல்லூரி. 2ஆம் இடம்- எஸ்.கோபிநாத்- யாழ்.இந்துக் கல்லூரி. 3ஆம் இடம்- என்.சதீஸ்காந்த்- யாழ்.இந்துக் கல்லூரி.

**தரம்- 10**

1ஆம் இடம்- எம்.ஜோன்சேவியர்- சென் பற்றிக்ஸ் கல்லூரி. 2ஆம் இடம்- ஜே.ஜோய் மாதவன்- சென் பற்றிக்ஸ் கல்லூரி. 3ஆம் இடம்- எம்.காஸ்ரன்ராஜ்- சென் பற்றிக்ஸ் கல்லூரி.

**கோட்ட மட்டப் போட்டி**
**யாழ்ப்பாணம்**

**தரம்- 7**

1ஆம் இடம்- எஸ்.சிவராம்- சென். ஜோன்ஸ் கல்லூரி. 2ஆம் இடம்- ஏ.ஆன். அபிநயா- வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை. 3ஆம் இடம்- எஸ்.சுபஸ்திகா- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**தரம்- 8**

1ஆம் இடம்- ஏ.சியாமினி- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 2ஆம் இடம்- எஸ்.விதுஷன்- சென்ஜோன்ஸ் கல்லூரி. 3ஆம் இடம்- பி.சங்கீதா- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**தரம்- 9**

1ஆம் இடம்- ஏ.அபிராமி- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 3ஆம் இடம் - எஸ்.கஸ்தூரி- வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை. ரி.டுசாந்த்- சென்ஜோன்ஸ் கல்லூரி. வி.ருந்துராஞ்சலி- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**தரம்- 10**

1ஆம் இடம்- எஸ்.சுமங்கலி- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. 2ஆம் இடம்- எம்.நிவிதா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. 3ஆம் இடம்- எஸ்.கோபனா- திருக்குடும்ப கன்னியர் மடம். எஸ்.பகீரதி- வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

**தரம் - 11**

1 ஆம் இடம்- எம்.விந்துஜா- வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை. 2ஆம் இடம்- ரி.சிரோஜன்- சென்.ஜோன்ஸ் கல்லூரி. 3ஆம் இடம்- வி.கலினா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. ஆர்.ரோகிணி- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. (து-79)

(தொடரும்)

# கர்மவீரர் காமராஜர்

முருக-தனுஷ்கோடி

## மீள்பார்வை 49



ஜவஹர்லால் நேருகி–ஜே!

சுதந்திர பாரத் மாதாகி –ஜே!

போன்ற முழக்கங்கள் ரெயில் நிலையத்தையே அதிர வைத்தன.

ரெயில் நின்றதும் நெல்லூர் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சங்கர் ரெட்டியும் மற்றும் நூற்றுக்கணக்கான காங்கிரஸ் தோழர்களும் காமராஜுக்கு மாலை சூட்டி வரவேற்று ரெயில் நிலையத்துக்கு அருகே போடப்பட்டிருந்த சிறிய அழகிய மேடைக்கு அழைத்துச் சென்றனர். காமரா ஜுக்குத் தங்கள் வரவேற்பையும் வாழ்த்தையும் தெரிவித் தனர் .நூற்றுக்கணக்கான பூமாலைகளை அணிவித்தனர். கூடை கூடையாக மலர்களைக் காமராஜின் தலையில் கொட் டி னர்.

மலர்க்கடலில் மிதந்தார் காமராஜ் .மக்கள் அன்பில் மூழ்கினார் மகிழ்ச்சி , வியப்பு ,நன்றி, அன்பு ,பணிவு ஆகிய உணர்ச்சிகளால் பின்னப்பட்ட ஒரு புது மனிதராக அவர் நெகிழ்ந்து நின்றார்.

தமக்கு அளிக்கப்பட்ட அந்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய அவரது பேச்சு வழக்கம் போல் மிகச் சுருக்கமாகவே இருந்தது. ஆனால் அதிலே நிறைந்த பொருளும் கனிவும் இருந்தது. கன்னித் தமிழில் அவர் ஆற்றிய நன்றியுரை களிதெலுங்கில் மற்றொருவரால் மொழிபெயர்க் கப்பட்டது.

தமிழக முதல் மந்திரி பக்த்வத்சலமும் ஒரு நிமிடம் பேசினார். கடைசியில் பரட்டைதலையும் அழுக்கு உடையுமாக இருந்த ஓர் ஏழைத் தொழிலாளி எப்படியோ, ஒரு மாலையைத் தூக்கிக் கொண்டு மேடையை நோக்கி ஓடிவந்தார். மேடையைவிட்டு கீழே இறங்குவதற்குத் திரும்பிய காமராஜ் தூரத்தில் ஓடிவரும் தொழிலாளித் தோழனைப் பார்த்ததும் அப்படியே நின்றார். அந்தத் தொழிலாளி ஓடோடி வந்து காமராஜுக்கு மாலையை அணிவித்து காமராஜ்காருகி என்று முழங்கினார். கூடியிருந்த மக்கள் கூட்டம் ஜே. முழங்கியது.

வரவேற்பு முடிந்ததும் காமராஜ் ரெயிலில் ஏறினார் ரெயில் புறப்பட்டது. இடையில் ரெயிலில் இருந்து 700 பேர்களுக்கும் ஆந்திரத் தோழர்கள் காப்பி கொடுத்து உபசரித்தனர்.

காலை 7.30மணிக்குக் காமராஜின் தனி ரெயில் பிட்ரகுண்டா என்ற ஆந்திரச் சிறுநகரை அடைந்தது. அங்கேயும் நூற்றுக்கணக்கான ஆந்திர காங்கிரஸ் தோழர்கள் காமராஜ் நாடார்காருகி ஜே.என்ற முழக்கத்துடன் வரவேற்றனர் .ரெயிலில் வந்த 700 பேர்களுக்கும் இட்லி, வடை, உப்புமா, பொங்கல், டீ, காபி என்று விதவிதமாகச் சிற்றுண்டிகள் கொடுத்தனர்.

அடுத்து ஓங்கோல் வரவேற்பு! வரவேற்புத் திட்டத்தில் ஓங்கோல் சேர்க்கப்படவில்லை ஆனால் வழிமறித்து நிறுத்தி வரவேற்பளித்தனர் ஓங்கோல் மக்கள் மலர்ந்த முகங்கள் மலர்மாலைகள் வாழ்த்து முழக்கங்கள் வலிய உபசரிக்கும் பண்பு–ஆரஞ்சு வாழைப்பழ அன்பளிப்பு ஆகியவற்றுக்குக் குறைவே இல்லை. பசுவிற்குப் பெயர் பெற்ற ஓங்கோல் நகரமக்கள் பசுபோலக் கருணையைப் பொழிந்தனர். திண்டி என்றால் தெலுங்கில் உணவு என்று பொருள். அது தெனாலியில் வண்டி நின்றதும் கிடைத்தது. காமராஜ் குழுவினருக்கு அற்புதமான மதிய உணவு கிடைத்தது மிகப் பெரிய விருந்து!வரவேற்பும் பாராட்டும் கூடச் சற்றுப்பலம்தான்.

பெரிய அலங்காரப் பந்தலில் ஆந்திர மாநில முதல் மந்திரி சஞ்சீவரெட்டி முன்னிலையில் வரவேற்பு நடந்தது. மலர்மாலைகள் மலையெனக் குவிந்தன விருந்து வரவேற்பு ஏற்பாடுகள் அனைத்தையும் ஓர் ஆந்திர மந்திரியே ஏற்று நடத்தினார்.வண்டி புறப்பட்டது அப்போது காமராஜ் நாடார்காருகி ஜே. என்ற முழக்கத்துடன் சஞ்சீவ ரெட்டி காருகி ஜே.என்ற முழக்கமும் ஒலித்தது ஆனால் ஒரு வித்தியாசம் காமராஜ் நாடர்காருகி ஜே.போட்டவர்கள் ஆந்திரர்கள் சஞ்சீவ் ரெட்டி காருகி ஜே.போட்டவர்கள் காமராஜுடன் சென்றதமிழர்கள்.

ஆந்திராவின் பெருநகரான விஜயவாடாவை அடைந்ததும் வாழ்த்தும் வரவேற்பும் பன்மடங்கு பெருகலாயின. ஆரஞ்சும் வாழைப்பழமும் சிற்றுண்டிப் பொட்டலங்களும் பெட்டி பெட்டியாய்க் குவிந்தன. மணமக்களுக்குச் சீர்வரிசை செய்வது போலிருந்தது அந்தக் காட்சி. ஒத்து ஒத்து (வேண்டாம் வேண்டாம்)என்றனர். தமிழர்கள் பெட்டுகண்டி பெட்டுகண்டி (வைத்துக்கொள்ளுங்கள் வைத்துக்கொள்ளுங்கள்) என்றனர் ஆந்திரச் சகோதரர்கள் .அந்த உபசரிப்பில்தான் எத்தனை அன்பு!

விஜயவாடாவில் நடந்த உபசரிப்பில் காமராஜ் மிகவும் உணர்ச்சி ததும்பப் பேசினார். சஞ்சீவ ரெட்டி அதைத் தெலுங்கில் மொழிபெயர்த்தார்.

## புவனேஸ்வரத்தில்

காந்தியடிகள் தலைமையில் சுதந்திரம் பெற்றுப் 17 ஆண்டுகளாகிவிட்டன. சுதந்திரம்பெற்றால் நம் நாட்டு மக்கள் அனைவரும் வசதியோடு வாழலாம் என்று அன்று காந்தியடிகள் கூறினார்கள் ஆனால் இன்று நம்நாடு சுதந்திரம் பெற்று மூன்று ஐந்தாண்டுத்திட்டங்களை நிறைவேற்றிக் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்த பின்னரும் ஏழை மக்கள் இன்னும் சுகம் பெற வில்லை. உணவற்றோரும் உடையற்றோரும் வீடற்றோருமாகப் பெரும்பாலோர் அவதி ப்படு கின்றனர்.

பெருகிய செல்வமும் திட்டங்களின் பலனும் எங்கே? கிருஷ்ணா நதி கடலில் கலப்பதுபோல் கலந்துவிட்டதா? அல்லது ஆவியாகி ஆகாயத்தில் சேர்ந்து விட்டதா? இல்லை அது இங்கேதான் ஒரு சிலரிடம் குவிந்து கிடக்கிறது அப்படிக் குவிந்துகிடப்பது ஆபத்து.

அதை எடுத்து அனைவருக்கும் சமமாக விநியோகிக்க வேண்டும். இந்தியர் அனைவருக்கும் உணவு ,வீடு, உடை, கல்வி ,சமவாய்ப்பு அகியவற்றைஅளிப்பதே காங்கிரஸின் இலட்சியம். அதை நிறைவேற்ற ஜெய்ப்பூரில் கூடி ஆலோசித்தோம் அதுவே ஜனநாயக சோஷலிசத் தீர்மானம் அதைச் செயல்படுத்த ஒரு திட்டம் வகுத்து மக்கள் ஆதரவைத்திரட்டவே இப்போது புவனேஸ்வரம் செல்கிறோம். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு அவசியம் தேவை. இடையில் எளிய தொண்டனாகிய எனக்கு நீங்கள் அளித்த இந்த மாபெரும் வரவேற்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி நறுக்குத்தெறித்தாற்போல் சுருக்கமாகவும் திட்டவட்டமாகவும் காமராஜ் பேசினார். 5 நிமிடங்களுக்கு மேல் எந்த இடத்திலும் அவர் பேசவில்லை .ஆனால் ஒவ்வொரு இடத்திலும் புதிது புதிதாகப் பேசினார் .எல்லாம் சோஷலிச சமுதாய அமைப்பைப் பற்றித்தான்! ஆந்திர மக்கள் மிகவும் அமைதியுடனும் ஆர்வமுடனும் காமராஜ் பேச்சைக் கேட்டனர்.

விஜயவாடா வரவேற்பு முடிந்ததும் ஜீப் வண்டியில் ஏற்றி காமராஜை ரெயில் நிலையத்துக்கு ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

(தொடரும்)




கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய

அலங்கார உற்சவம்

பதினொராம் திருவிழா 09.08.2006

காலடியில் வீழ்கின்றேன் காத்தருள்வான்

ஆலடியில் வீற்றிருக்கும் ஆனை முகத்தானின்
காலடியில் வீழ்கின்றேன் காத்தருள்வான் – ஆலயந்தான்
சூரன் கஜமுகனைச் சூழ்போரிற் றோற்கடித்த
வீரகத்திப் பிள்ளையார் வீடு

சிற்பி


## பாதணி அணிந்து வருவதைத் தவிர்க்க பக்தர்களிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவகாலத்தில் அங்கப் பிரதட்சனை செய்யும் சில அடியார்களின் உடலில் தோல் தடிப்பு போன்ற நோய் ஏற்பட்டிருப்பது எமது கவனத்திற்கு கொண்டு வரப் பட்டுள்ளது. இந்தமுறை நாகர்கோவில் புதியமணல் பரவியபோதிலும் இவ்வாறு நிகழ்ந்துள்ளமை கவலைக்குரியதாகவுள்ளது.

இதற்காக கடந்த இரண்டு நாட்களாக அங்கப்பிரதட்சனை செய்யும் இடங்களில் நீர்விசிறல் நடவடிக்கை தவிர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மண்ணில் இருக்கக்கூடிய கிருமிகள் சூரிய வெப்பத்தில் அழிந்து விடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான இடங்களில் பாதணிகளோடு நடக்கும்பொழுது அவை ஊடாகவும் கிருமிகள் காவப் படலாம்என்ற சுகாதார அடிப் படை எண்ணத்திலேயே பாதணிகளை ஆலய வீதிகளில் முழுமையாகதவிர்க்குமாறு நாம் வேண்டிக் கொண்டோம். அதற்கு கணிசமான ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருப்ப தையும் குறிப்பாக இளைஞர் சமுதாயம் எமது கோரிக்கைக் கிணங்க செயற்பட்டதையும் நன்றியோடு குறிப்பிடும் அதேவேளை நான் முன்குறிப்பிட்ட நோய் காணப் படுகையை கவனத்தில் எடுத்து ஆலயவீதிமுழுமையிலும்பாதணி அணிவதை தவிர்த்து தவுமாறு கேட்டுக்கொள்வதாக யாழ். மாநகர ஆணையாளர் சி.வீ.கே. சிவஞா ணம் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (து)

## இந்திய மத்திய அமைச்சர்களுடன் மங்கள சமரவீர சந்திப்பு

(கொழும்பு)

சமாதான-முயற்சிகளில் நம் பிக்கையுடன் செயற்படுபவராக வெளியுறவு அமைச்சர் மங்கள சமர வீர விடுதலைப்புலிகள் நிலைமையை மேலும்சிக்கலாக்கினாலும் இலங்கை அரசு சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் இருப்பதாக வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரி வித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் இந்திய கம்யூனிஸ்டிடம் கட்சியின் தலை வர்களான ஏ.பி.பரதன், ச.ராஜா ஆகியோருடன் இலங்கை நிலவரம் குறித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் நிதி அமைச்சர் ப.சிதம் பரம், பெற்றோலிய துறை அமைச்சர் முரளிதியோரா, சுகாதர அமைச்சர் அன்பு மணி ராமதாஸ் ஆகியோரையும் மங்கள சமரவீர சந்தித்துள்ளார். (து-2)

## பொலிஸ் நிலையம் மீது ஆட்லறி தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலை தோப்பூர் பொலிஸ் நிலையத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி தாக்குதலில் 5பேர் காய மடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவர் பொதுமக்கள்என்றும்இருவர்பொலிஸ் அதிகாரிகள் என்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களில் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள மூன்று வீடுகளும் சேதமடைந் துள்ளது. காயமடைந்தவர்கள் திருகோண மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (து-9)

## கால் இறுதிப் போட்டிக்குத் தெரிவு

வி.டி ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் யாழ். சென்றல் விளையாட்டு கழக அணிகள் கால் இறுதி போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட யாழ் . சென்றல் விளையாட்டுகழகம் நான்காவது வருடமாக நடாத்திவரும் வி.டி. ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் முதற் போட்டியாக யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் யங்ஸ்ரார் விளையாட்டு கழகத்துக்கும் கடந்த சனிக்கிழமை ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டு கழகம் சமூகம் அளிக்காத காரணத்தால் யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டு கழக அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

2ஆவது போட்டியில் வல்வெட்டித்துறை ஈகிஸ் விளையாட்டுக் கழகமும் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கனகரத் தினம் மகாவித்தியாலயம் , ஸ்ரான்லி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டு கழக அணி 31.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களை பெற்றது. வி.ரஜிஸ்குமார் 23, எஸ்.விமலகாந் 16, எஸ்.பாலகுமார் 37 ஓட்டங்களை பெற்றனர். ஈகிஸ் விளையாட்டு கழக அணியைச் சேர்ந்த கோபிநாத் 4 விக்கெட்டுகளையும் யபோ 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஈகிஸ் விளையாட்டுக் கழக அணி 27.4 ஓவர்களில் 98 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர். சசி31 ,சுஜீவன் 24 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சின் யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த யசோ 2 விக்கெட்டுக்களையும் விமலனாந்த் 2 விக்கெட்டுக்களையும் பாலகுமார் 3 விக்கெட்டுகளையும் ரஜிவ் குமார் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர் .யாழ். சென்றல் வி.க. அணி 58 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. (து)

# வேலைவாய்ப்பும் வருமானமும் இல்லாத நிலையில் கூலித்தொழிலாளர்கள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக நிலவி வருகின்ற அசாதாரண நிலைமை காரணமாக கட்டடத்தொழிலாளர்கள், கூலிவேலை செய்வோர், பொதிகள் ஏற்றி இறக்குவோர், விவசாயக்கூலிகள் முதலியோர் போதிய தொழில் வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் தமது ஜீவனோபாயத்தை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நாளாந்த வருமானம் இல்லாத நிலையில் தமது குடும்பங்களைக் காப்பாற்றுவதிலும் ஏனைய குடும்ப நடவடிக்கைகளைத் தொடர்வதிலும் இவர்கள் பல சிக்கல்களை அனுபவித்துவருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

குறிப்பாக இத்தகைய குடும்பங்களில் வறுமை நிலை கொண்டிருப்பதுடன் பெரும்பாலான குடும்பங்களில் ஒருநேர உணவே உட்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக இக் குடும்பங்களில் இருக்கக்கூடிய சிறுவர்கள் மத்தியில் போஷாக்கின்மையும், பட்டினி நிலையும் காணப்படுவதாக சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் தெரிவித்துள்ளனர்.


தற்போதைய குடாநாட்டு நிலைமையினால் பாதிப்படைந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இவ்வகைப்பட்ட குடும்பங்களுக்கு அரசினால் மாதாந்தம் வழங்கப்படுகின்ற உலர் உணவு நிவாரணம் மற்றும் சமுர்த்தி நிவாரணம் போன்றவை மாதத்தில் ஒரு சில, குறிப்பிட்ட நாட்களுக்குமட்டுமே மூன்றுவேளை உணவைப் பெற ஏதுவாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருக்கக்கூடிய குடும்பங்கள், பிரதான உழைப்பாளிகளை இழந்த குடும்பங்கள் போன்றவை தமது அன்றாட வாழ்க்கை முன்னெடுத்துச் செல்வதில் பல சிக்கல்களைச் சந்தித்து வருகின்றன.

மேலும் இத்தகைய குடும்பங்களில் இருக்கக்கூடிய பாடசாலை செல்கின்ற மாணவர்களில் பெரும்பாலானவர்கள் காலை உணவினை எடுக்காமலே பாடசாலைகளுக்குச் செல்வதாகவும் அறிய வந்துள்ளது. அத்துடன் இத்தகைய மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்வதுமில்லை என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன் இத்தகைய குடும்பங்களில் அன்றாட வருமானம் இல்லாமல் இருப்பதால் குடும்பப்பிரச்சினைகளும் பெரிதாகத் தோற்றம் பெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது. (கு-16)





கோண்டாவில் நாகபூஷணி அம்மன் வீதி சிவபூமி பாடசாலைக் கருகில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சதாசிவம் கஜரூபன் (வயது 26) என்பவரது சடலத்தை யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேரகன் பார்வையிடுவதையும், கொலை செய்யப்பட்டவரின் தாயாரும் உறவினர்களும் அழுது புலம்புவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- திலீவின்பன்)

# பல இலட்சம் ரூபா செலவில் ச.ச.நிலையத்துக்கு புதிய கட்டடம்

(தென்மராட்சி)

கைதடி பிரதேசத்தில் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின் போது சேதமடைந்த கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்துக்குப் புதிய கட்டடம் ஒன்று பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த வாரம் நிலைய வளவில் தலைவர் எஸ்.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. புதிய கட்டடத்துக்கான அத்திபாரக்கல்லை நிலையத்தின் முன்னாள் தலைவரான சி.திரவியம் நாட்டிவைத்தார்.

இந்நிகழ்வின் போது நிலைய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களும் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (கு-16)

# தீவிரவாதத்தை இனங்காண்பதில் இணைந்து நடக்க முடிவு

இந்தியாவிற்கு எதிராக செயல்படும் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் உள்ளனர். என அமெரிக்க வெளியுறவு துணை அமைச்சர் ரிச்சர்டு பவுச்சர் கூறியுள்ளார். இந்தியா வந்துள்ள அமெரிக்க வெளியுறவு துணை அமைச்சர் ரிச்சர்டு பவுச்சர் நேற்று முன்தினம் இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

மூன்று மணி நேரம் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ரிச்சர்டு பவுச்சர் செய்தியாளர்களிடம் தெற்காசிய பிராந்தியத்தில் தீவிரவாதம் இருப்பது குறித்து அனைவருக்கும் தெரியும். அவர்களில் சிலர் பாகிஸ்தானில் உள்ளனர் இவர்களில் சிலர் இந்தியாவிற்கு எதிரான தீவிரவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விஷயத்தில் காஷ்மீர் பிரச்சினையையும் தீவிரவாதத்தையும் இணைத்துப் பார்க்க விரும்பவில்லை பல்வேறு காரணங் களுக்காக தீவிரவாதத்தை எதிர்த்து போராடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தீவிரவாதத்தை ஒழிக்கும் நட வடிக்கை இன்னும் முடிவடையவில்லை. இந்த விஷயத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஏராளமாகவுள்ளன.

இரு நாடுகளுக்கு இடையிலான வெளியுறவுசெயலர்கள் அளவிலான பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டதை அமெரிக்காவால் புரிந்துகொள்ள முடிகிறது. தீவிவாதத்தை எதிர்த்துப் போராடும் வகையில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். தீவிரவாதம் எந்த பகுதியிலிருந்து ஏவப் பட்டாலும், எந்த வடிவத்தில் ஏவப்பட்டாலும் அதை கண்டறிவதில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும் எனக்கூறினார். (து)

உலக தரிசனம்

# மராட்டியத்தில் மழைக்கு 64 பேர் பலி 1.5 இலட்சம் பேர் வெளியேற்றம்


மராட்டியம், குஜராத் மற்றும் ஆந்திராவில் பலத்த மழையால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மழையால் மும்பை நகரம் 3 ஆவது நாளாக தத்தளிக்கிறது.

மின்சார ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மராட்டிய மாநிலத்தில் உள்ள புல்தானா, ஜால்னா ஹிங்கோலி, நாண்டட், யாத்வாமல் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நாசிக் நகரம் மழையில் சிக்கி தவிக்கிறது.

மாநிலம் முழுவதும் 19 மாவட்டங்களில் உள்ள 685 கிராமங்கள் மழை வெள்ளத்தால் மூழ்கியுள்ளது. அங்குள்ள தாழ்வான பகுதிகளில் இருந்து 1 இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். மீட்பு பணியில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். ஹெலி கப்டர் மற்றும் படகுகள் மூலம் இராணுவ வீரர்கள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

50 இலட்சம் ஏக்கர் விவசாய பயிர் வெள்ளத்தால் நாசமானது. மழைக்கு இதுவரை 69 பேர் பலியாகியுள்ளதாக மராட்டிய முதல்வர் விலாஸ் ராவ் தேஷ்முக் கூறியுள்ளார். வெள்ள நிவாரணம் குறித்து மராட்டிய மந்திரி சபை இன்று ஆலோசனை நடத்துகிறது. வெள்ளம் பாதித்த அவுரங்கபாத் பகுதிகளை முதல் மந்திரி நேற்று பார்வையிட்டார்.

பலத்த மழையால் குஜராத்தின் தெற்கு பகுதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அணைகள் நிரம்பி பல்வேறு கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது. சூரத் நகரம் வெள்ளத்தால் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. அங்கிருந்த 50 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டனர். (து)



சீனாவில் கோடைகாலத்தை முன்னிட்டு ஹார்பின் நகரில் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

# லெபனானின் உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது இஸ்ரேல் குண்டுவீச்சில் 70 பொதுமக்கள் பலி

இஸ்ரேலின் 2 இராணுவ வீரர்களை லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் கடந்திச்சென்றதை தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் விமானங்கள் தொடர்ந்து குண்டுகளை வீசி கடந்த 28 நாட்களாக தாக்குதல் நடத்திவருகிறது. இந்த தாக்குதலில் லெபனானின் தலைநகர் பெய்ரூட் உட்பட பல முக்கிய நகரங்களில் கட்டடம் இடிந்து சேதம் அடைந்தன. 900க்கும் மேற்பட்ட பொது மக்கள் பலியாகிவிட்டனர். வீடுகள் இடிந்து தரைமட்டமாகிவிட்டதால் 8 இலட்சம் பேர் அகதிகளாக முகாம்களில் தங்கியுள்ளனர்.

இஸ்ரேலுக்குள் லெபனானின் ஒரு உளவு விமானம் புகுந்து முக்கிய பகுதிகளை நோட்டம் விட்டது. அந்தக்குட்டி விமானம் உளவு பார்த்துக்கொண்டிருந்தபோது இஸ்ரேல் விமானப்படையினர் அதை சுட்டு வீழ்த்தினார்கள். இஸ்ரேல் விமானங்கள் நேற்று லெபனானில் பல பகுதிகளில் சரமாரியாக குண்டு வீசின. இதில் பெண்கள் , குழந்தைகள் உட்பட 70 பேர் பலியானார்கள் காசிணேயி பகுதியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு குண்டுவீச்சில் இடிந்து தரைமட்டமானது. (து)

எத்தனை கற்றாலும் எத்தனை படித்தாலும் பயன் இல்லை. ஒருவருக்கு வழிகாட்டும் குரு சரியாக அமைய வில்லை என்றால்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# நல்லூருக்கு வரும் பக்தர்கள் ஒழுங்கைப் பேண வேண்டும்

நல்லூர்க் கந்தப்பெருமானின் மஹோற்சவம் ஈழத் தமிழர்களின் பெருவிழா. ஈழத் தமிழர்களின் வரலாற்றுத் தொன்மைக்கும் பண்பாட்டியல் பெருமைக்கும் நல்லூர்க் கந்தப்பெருமானின் ஆலயமும் மஹோற்சவமும் சான்றாகும்.

சைவ மக்களின் வழிபடு கடவுள் என்பதற்கு அப்பால் நல்லூர் முருகன் எல்லா மதத்தவர்களினதும் வழிபடு கடவுளாக இருப்பது பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

ஞானிகளும் யோகிகளும் நடமாடிய நல்லூர் மண்ணில் புனிதத்தைப் பேணுவதில் அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும்.

நல்லூர்க் கந்தப்பெருமானின் மஹோற்சவம் ஆரம்பித்து விட்டால் அது தமிழர்களின் பெரு விழாவாகக் கொண்டாடப்படுவதன் ஊடே இருக்கக் கூடிய சமூக ஒற்றுமை நோக்குதற்குரியது.

அதிகாலை வேளையில் ஆலய வீதியில் அங்கப்பிரதட்சணம் செய்யும் இளைஞர்கள் 'அரோகரா' என்ற ஒலியின் அதிர்வு இவற்றை எல்லாம் நோக்கின் சைவ சமயத்திற்கு எக்காலத்திலும் எவராலும் ஊறு விளைவிக்க முடியாது என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கூறிய கந்தபுராணக் கலாசாரம் இதுவன்றோ! என்று எண்ணத் தோன்றும்.

அத்துணை பக்தி பூர்வக் காட்சியை அதிகாலை வேளையில் நல்லூர்க் கந்தப் பெருமானின் ஆலயச் சூழலில் காண முடியும்.

எமது இனத்தை, எமது வாழ்வியலை, பண்பாட்டுக் கோலத்தை உயர்வடையச் செய்யும் கந்தப்பெருமானின் மஹோற்சவத்தில் ஆலயச் சூழலின் புனிதத் தன்மையைப் பேணுவதில் ஒவ்வொருவரும் கரிசனை கொண்டு செயலாற்ற வேண்டும்.

குறிப்பாக இளைஞர்கள் இது விடயத்தில் அக்கறை கொள்வது அவசியமாகும். எமது இனத்தின்-சமயத்தின் கலாசார விழுமியங்களை பேணுவதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டும்.

கூடவே அதற்கான ஊக்குவிப்பைப் பெற்றோர்களும் பெரியோர்களும் வழங்குவது அவர்தம் கடமையாகும்.

ஆலயங்களுக்குச் செல்லும்போது பின்பற்ற வேண்டிய ஆடைக் கலாசாரத்தை கடைப் பிடிப்பதற்கு மாணவர்கள் மத்தியில் ஊக்குவிப்புத் தேவை.

அதேவேளை வேட்டியணிந்து ஆலயத்திற்குச் செல்லும் முறைமை உளவியல் ரீதியில் நம்மை ஆற்றுப் படுத்தவல்லது.

மேலை நாட்டு ஆடைக் கலாசாரம் நம் வாழ்வியலில் ஆக்கிரமித்துக் கொண்டாலும் உரிய இடத்தில், உரிய நேரத்தில் எமது பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்துவது எமது இனம் சார் விழுமியங்களை-விலை மதிப்பற்ற தமிழர்களின் உயர் பண்பாட்டைப் பாதுகாப்பதற்கு வழிவகுக்கும்.

தெய்வீகம் என்பது புனிதத் தன்மையிலும் வழிபாட்டு வெளிப்படுத்துகையிலுமே அமைந்துள்ளது என்பதை மறுத்து விட முடியாது.

அவ்வகையில் நல்லூரில் காலாகாலமாகப் பேணப்பட்டு வந்த தெய்வீகத்தை எவரும் குறை த்து விடுவதற்குக் காரணமாக இருந்து விடக் கூடாது.

எனவே நல்லூர் மஹோற்சவ காலத்தில் இளைஞர்கள் பாதணிகளுடன் வீதியில் நடமாடுவதைத் தவிர்ப்பது-மேலத்தேய கலாசாரங்களை ஒதுக்கி வைப்பது - தேவையற்ற பேச்சிலும் செயலிலும் ஈடுபடுவது இவை அனைத்தும் விலக்கப்பட வேண்டும்.

எம்மை நாமே ஒழுங்கு படுத்திக் கொண்டு ஆலயத்திற்குச் செல்வதானது இறையருளைப் பெறுவதற்கும் தெய்வீகச் சூழலை ஏற்படுத்துவதற்கும் சமூக ஒற்றுமைக்கும் நல்வாழ்விற்கும் வாய்ப்பாக அமையும்.

# சாதகமான பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் அளிக்குமாறு கோரி நேற்று இரண்டாம் நாளாக யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் வலயக் கல்விப்பணிமனை முன் நடாத்திவரும் பகிஷ்கரிப்புப்போராட்டத்தின் போது அவர்களால் ஜனாதிபதிக்கும் மாகாண கல்வி அமைச்சுக்கும் அதன் செயலாளருக்கும் மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் எஸ். ஜெயந்தன் தெரிவித்துள்ளார்.

அம் மகஜரில், ஆளணி வெற்றிடத்திற்கு அமைவாகவே தொண்டர் ஆசிரியராக நாங்கள் நியமிக்கப்பட்டதால் தற்போது ஆளணி வெற்றிடத்தை கருத்தில் கொள்ளாது நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்றும், க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்திய டைந்திருத்தல் போதுமானது ஆனால் பல்கலைக்கழக அடிப் படைத்தகுதி நீக்கப்பட வேண்டும் என்றும், க.பொ.த. உயர் தரத் தில் கல்வி கற்ற பாடத்துறையை கருத்தில் கொள்ளாது கற் பிக்கும் அல்லது தகுதியுள்ள பாடத்திற்கு நியமனம் வழங்க வேண்டும் என்றும், 2001 தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட் சையில் தெரிவு செய்யப்பட்ட தகுதியானவர்கள் (2000-10-01 சுற்று நிருப இல- 03/2000). பட்டியல் மாகாண சபையினால் அந்தந்த வலய விளம்பரப் பலகையில் பெயர்ப்பட்டியல்கள் பிரசுரிக்கப்பட்ட போதிலும் இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை என்றும், 3 வருடகாலம் தொடர்ச்சியாக சேவை செய்துகொண்டிருக்கும் அனைத்துத்தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரை இப் போராட்டம் தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து-133)

# மந்துவில் வடக்கு கைதடி கிழக்கு கிராமங்களுக்கு மின்வசதி

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மந்துவில் வடக்கு , கைதடி கிழக்கு கிராமங்களுக்கு இன்னமும் மின்சார வசதிகள் செய்துகொடுக்கப்படாமை குறித்து மேற்படி கிராமங்களில் வாழும் மக்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இவ்விரு கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து தரும் படி கிராம மக்கள் இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கைகள் விடுத்திருந்தபோதும் கூட எந்தவித நடவடிக் கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என தெரியவருகிறது.

அத்துடன் இவ்விரு கிராமங்களுக்கும் மின்சார இணைப்பை பெற்றுத்தரும்படி பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தும்கூட எதுவுமே நடைபெறவில்லை என கிராம மக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (து-16)

# அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு அதிரடிப்படையினர் தடை

(கொழும்பு)

அம்பாறையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தில் சேவையாற்ற அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு காங்கிரஸ் காஞ்சிரங்குடா சிறப்பு அதிரடிப்படையினர் தடைவிதித்துள்ளனர் எனத் தெரிகிறது.

அம்பாறை தங்காவேலாயுதபுரம் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு சேவையாற்றிவரும் அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள் காஞ்சிக்குடா பகுதி ஊடாகவே செல்வது வழக்கம்.

வழமைபோல் நேற்றுக்காலை காஞ்சிக்குடா சிறப்பு அதிரடிப்படை சோதனை சாவடியூடாக பணிக்குச் செல்லும் போது அரச சார்பற்ற நிறுவனப்பணியாளர்களை அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்தி தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பிரதேசங்களில் பணிகளை செய்யக்கூடாது என்று அச்சுறுத்தப்பட்டு திருப்பி அனுப் பப்பட்டுள்ளனர் எனக்கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறையிடவுள்ளதாக சேவா தொண்டு நிறுவனஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (து)

# திருமுறை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான அனுசரணையுடன் அகில இலங்கை திருமுறை மன்றம் எடுக்கும் திருமுறைப்பெருவிழா இன்று காலை 7 மணிக்கு நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தானத்தில் அகில இலங்கை திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

அருளுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதின இரண்டாவது குரு மாகசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தர் பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார்.

யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரமஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். செல்வி ஜனனி நல்லைநாதன் நுண்கலைமாணி (கர்நாடக இசை வயலின்) கலாவித்தகர் (வாய்ப்பாட்டு வயலின்) திருமுறை வல்லாராக கௌரவிக்கப்படுவார். (து)

# ஊடகவியலாளர் சட்ட மூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது

(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவால் பாராளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு பயன்பாடு தொடர்பான சட்ட மூலம் தொடர்பாக இறுதி நாள் விவாதம் நேற்றுக்காலை பாராளு மன்றத்தில் தொடர்ந்து நடைபெற்றது.

நேற்று நண்பகல் வரை நடைபெற்ற இச்சட்டமூலம் மேலாக விவாதம் முடிவடைந்ததும் வாக்கெடுப்புக்கு விடாமலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட மூலத்திற்கு கட்சி வேறுபாடின்றி சகலரும் ஆதரவளிக்கவேண்டும் என ஊடக அமைப்புக்கள் ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-7)

# குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனைப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை காலை குடும் பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வீட்டில் இருந்த போது இவரை வெளியில் அழைத்து சுட்டுக்கொன்றுள்ளனர்.

இவரின் சடலம் வாழைச்சேனை வைத்திய சாலையில் வைக்கப் பட்டுள்ளது. கொல்லப்பட்டவர் 22வயதுடைய கணபதிப்பிள்ளை கமலநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (து)

# யாழ். மாவட்டத்தில் பல்வேறு பயிற்சி நெறிகள்

(தென்மராட்சி)

உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருடம் மேலும் சில பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என மேற்படி நிறுவனத்தின் பிரதி வெளிக்கழப்பணிப்பாளர் வே. ஜெயராஜசிங்கம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் ஊற்று நிறுவனம் வடமராட்சி பிரதேசத்தில் வீட்டு மின் இணைப்புப்பயிற்சி நெறியையும், அறவழிப்போராட்டக்குழு தென்மராட்சிப்பிரதேசத்தில் அலுமினியம் பெருத்துதல் பயிற்சி நெறியையும் , சர்வோதய வலிகாமம் பிரதேசத்தில் தையல் பயிற்சி நெறியையும்,தேசிய இளைஞர் சேவை மன்றம் கைத்தொழில் திணைக்கழகமும் யாழ்ப்பாணத்திலும் வெவ்வேறு பயிற்சி நெறிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடாத்தப்படும் ஒவ்வொரு பயிற்சி நெறியிலும் தலா 25 பயிற்சியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார். (து-16)

# கட்சி மாறிய ஐ.தே.க. கட்சி எம்.பி.கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பக்கம் தாவி அமைச்சர்களாக உள்ள ஹெகலிய ரம்புக்வெல, ஹிந்த சமரசிங்க ஆகியோர் மீதான ஒழுங்கு நடவடிக்கை குறித்த அறிக்கை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

இருவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மேலும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் அரசாங்கத்தில் இணைந்துள்ள மற்ற உறுப்பினர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது என்றார் திஸ்ஸ அத்தநாயக்க.

ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கைகளை ஏற்கவில்லை எனின் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவேண்டும். தங்களை தேர்ந்தெடுத்த மக்களுக்கு துரோகம் செய்யக்கூடாது என்று திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (து)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



விதி வழி மதி செல்லும் என்று பொதுவாகச் சொல்வது வழக்கம். இறைவன் அருளால் விதியையும் வெல்ல முடியும். மதியையும் வெல்ல முடியும்.

# தொண்டர்கள் கொலைக்கு ஐ.சி.ஆர்.சி. கண்டனம்

பிரான்ஸ் நாட்டின் மனிதாபிமான அமைப்பொன்றின் 15 தொண்டர்கள் திருகோணமலை மாவட்டம் மூதூர்ப் பகுதியில் இரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டமை குறித்து செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் கிளை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டாற்றி வந்த இத் தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டமை பாதுகாப்பு நிலையில் உள்ள சீரழிவையே காட்டுவதாக உள்ளதாக ஐ.சி.ஆர்.சி. தனது கவலையை தெரிவித்துள்ளது.

'இத் தொண்டர்களுக்கு ஏற்பட்ட பயங்கரத்தை அறிந்து திடுக்கிட்டோம். மூதூர் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றி வந்த இத் தொண்டர்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட செயலாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது' என திருகோணமலை ஐ.சி.ஆர்.சியின் உப குழுவின் தலைவர் வியோனி டுன்ரன் தெரிவித்தார். (து)

## தொண்டர் ஆசிரியர்கள் பகிஷ்கரிப்பால் கல்விப் பணிமனை இடமாற்றம்

தொண்டர் ஆசிரியர்களது பகிஷ்கரிப்புப் போராட்டத்தால் நேற்று முன்தினமும் நேற்றும் இயங்க முடியாது ஸ்தம்பிதம் அடைந்திருந்த யாழ்.கல்வி வலயத்தின் செயற்பாடுகள் நேற்றைய தினம் யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டு அங்கிருந்து கல்வி சார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

அலுவல்கள் காரணமாக வலயக் கல்வித் திணைக்களத்திற்கு வந்த பொதுமக்கள் அதன் செயற்பாடுகள் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டதை அறிந்து அதிர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டனர். (து)

## விமானப்...

காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் திருகோணமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்திய அடையாளம் தெரியாத நபர்கள்மீது விமானப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். (ச-5)

## அம்பாறை...

சம்பவ இடத்திலேயே அதிரடிப் படையைச் சேர்ந்த இருவரும் கொல்லப்பட்டனர். பொத்துவில் சந்திவெளி அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் கே.டபிள்யு. சுமதிதாஸ மற்றும் கான்ஸ்டபிள் எம்.என்.பண்டார ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். (ச-5)

## இரு...

கையில் 6.25 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் கொழும்புத் துறை வீதி இலந்தைக்குளம் பகுதியைச் சேர்ந்த அகிலன் (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணவிசாரணையின் பொருட்டு அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (து-51,133)

## வெளியீட்டு விழா

தமிழ்ச் செய்தி தகவல் மையத்தின் புயலின் காகங்களும் மைனாக்களும் என்ற சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று பிற்பகல் மூன்று மணிக்கு யாழ்.கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக்கழக மற்றும் பயிற்சி மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். (து)

## மூதூரில் தொடர்ந்து தாக்குதல்

மூதூர்க் கிழக்குப் பகுதிகள்மீது படையினர் நேற்று விமானக் குண்டு வீச்சு மற்றும் எறிகணை வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கிபீர் விமானங்கள் நேற்று முற்பகல் இரு தடவைகள் வந்து மக்கள் குடியிருப்புக்களுக்கு சமீபமாக குண்டுகளை வீசிச் சென்றன.

திருகோணமலை நகரிலிருந்தும் மங்கிபிரிட்ஜ் பிரிக்கேட் தலைமையகத்திலிருந்தும் மாவிலாறு பகுதியிலிருந்தும் படையினர் எறிகணைத் வீச்சுத் தாக்குதல்களை மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# விடுதலைப்புலிகள் மீதான தடையே தற்போதைய நிலைக்குக் காரணம்

## கண்காணிப்புக் குழுத் தலைவர் விளக்கம்

போர் நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் குறித்து அரசாங்கம் மேற்கொள்ளும் ஒப்பீடுகள், அடிப்படையில் தவறானவை எனக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து விளக்கமளித்திருக்கும் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன், சிறுவர்களைப் படையணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இணைத்துக் கொள்வதாகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளையும் அரசாங்கத்தால் நிகழ்த்தப்படும் வான் வழி தாக்குதல்களையும் ஒப்பிட முடியாது எனக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் போர் நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்ற போதிலும் அவை மிகவும் பாரதூரமானவை என்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் சுட்டிகாட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடை செய்வதற்கு முன்னர் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை எடுத்து விளக்கிய போதும் இது விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் அலட்சியப் போக்கைக் கைக்கொண்டதாகவும் உல்ப் ஹென்றிக்சன் குற்றம் சுமத்தியுள்ளார். பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையின்எதிர்விளைவை தற்போதுஅனைவரும் அனுபவித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## முன்னாள் பா.உ. சிவதாசனின்...

பாராளுமன்ற உறுப்பினர் சிவதாசனின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவர் பயணம் செய்த வான் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி முற்றாக தீப்பற்றி எரிந்துள்ளது. படுகாயமடைந்த சிவதாசன் ஈ.பி.டி.பி.கட்சியின் நீண்ட கால உறுப்பினரும் பனை அபிவிருத்திச் சங்க சபையின் தலைவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவதாசன் சென்ற உண்டாய் ரக வானின் பின்புறத்திலேயே குண்டு பொருத்தப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. இதுவொரு நேரம் குறிக்கப்பட்ட குண்டாக அல்லது காந்தரக குண்டாக இருக்கலாம் என பாதுகாப்புத்தரப்பினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான வான் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த முஸ்லிம் இனத்தவருக்கு சொந்தமானது எனவும் இவரிடம் இருந்து இந்த வாகனத்தை பனை அபிவிருத்திக் கூட்டு ஸ்தாபனம் வாடகை அடிப்படையில் அமர்த்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக்குண்டு வெடிப்பினால் வான் முற்றாக எரிந்துபோயுள்ளது. சம்பவம் நடந்த வேளை வீதியில் பயணித்த தாயும் குழந்தையும் பாதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் மூன்று பெண்களும் ஆறு ஆண்களும் அடங்குவர். (எ-5)

## மூடப்பட்டிருந்த மாவிலாறு...

எனினும் அச்செய்திகள் தொடர்பாக வெளியுலகிற்கு தெரியப்படுத்தியுள்ள நிலையில் அணை திறக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நோர்வேயின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து நல்லெண்ண அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அணையைத் திறந்து விட விடுதலைப்புலிகளும் கண்காணிப்புக் குழுவினரும் முயன்றபோது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி எறிகணை வீச்சுத் தாக்குதலினால் இம்முயற்சியை விடுதலைப்புலிகள் நிறுத்தியிருந்தனர்.

எனினும் தாங்கள் படை நடவடிக்கை மூலம் திறந்து விடுவோம் என மீண்டும் புறப்பட்ட இராணுவ முயற்சி விடுதலைப்புலிகளினால் முறியடிக்கப்பட்டதன் மூலம் அரச படைகளின் இயலாத் தன்மை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டிருந்தது.

அந்நிலையிலேயே நேற்று மாலை 5 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மற்றும் பொதுமக்கள் அமைப்புப் பிரதிநிதிகள் அணைக்கட்டுப் பிரதேசத்திற்குச் சென்று அணைக் கதவைத் திறந்து விட்டனர்.

இதன் மூலம் பல விவசாயிகள் பயன் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)


# 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 17 11 1955



இறப்பு 26 06 2006

கந்தையா யோகேஸ்வரன் (பவான்)
நாயன்மார்கட்டு

இளம் வயதிலேயே தொழில் கற்று உயிரிழக்கும் போதும் வேலைக்காக அணிந்திருந்த ஆடைகளுடனேயே உயிர் விட்ட எங்கள் அன்புக்குரிய யோகேஸ் அண்ணனுக்கு எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலியை செலுத்தி ஆறுதல் அடைகின்றோம்.

எங்களது இன்ப துன்பங்களில் எல்லாம் பங்கெடுத்து எங்கள் இன்பத்தில் மகிழ்ந்து எங்கள் துன்பத்தில் துயரடைந்து நல்ல நண்பராய் ஆனீர்கள். அன்பும் கருணையும் நிரம்பிய மாசற்ற உங்கள் இதயம் துப்பாக்கிக் குண்டுகளால் நிறுத்தப்பட்டு விட்டது. உங்களோடு பழகிய நாட்கள் எங்களுக்கு என்றும் பசுமையானவை.உங்கள் உயிர் பறிக்கப் பட்டாலும் உடல் அழிக்கப்பட்டாலும் இந்த மண்ணில் உண்மையும் நீதியும் நிலைத்திருக்கும் வரை உங்கள் பெயரும் நிலைத்திருக்கும்.

நண்பர்கள்



# உடன் தேவை

பத்திரிகை விநியோகஸ்தர்கள்

சொந்தமாகமோட்டார்சைக்கிள் வைத்திருப் பவர்கள்

நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.



# பதவி வெற்றிடம்

பொது முகாமையாளர்

35–55க்கு வயதிற்குட்பட்டவர்கள் (மும்மொழித் தொடர்பாடல் உள்ளவர்களுக்கும் முகாமைத்துவ அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)

விண்ணப்பங்களை 12.08.2006க்கு முன்னதாக நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி, இல. 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.